©
தமிழ்நாடு அரசு
2008

பதிவெண்: எம்.

# காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

காஞ்சிபுரம், நவம்பர் 7, 2008

[ எண் 33

ஐப்பசி 22, திருவள்ளுவர் ஆண்டு—2039

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை.

———

**2008-2009 ஆம் ஆண்டிற்கு பொது சுகாதாரப் பிரிவின்கீழ் ஆலந்தூர் நகராட்சியில் வசூலிக்கப்படும் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமக் கட்டணம் 200 சதவீதம் திருத்தி வசூல் செய்தல் குறித்த அறிவிப்பு.**

(இந்த அறிவிப்பு 1—4—2008 முதல் அமுலுக்கு வருகிறது)

(ந.க. எண் 3298/2007/எச்1, 21—10—2008)

ஆலந்தூர் நகராட்சி 2007 ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாளன்று மன்ற தீர்மான எண் 58—ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதைக் குறித்து இதற்கு முன் பிரசுரிக்கப்பட்ட எல்லா அறிவிப்புகளையும் மாறுதல் செய்து திருத்தப்பட்ட 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்படி ,ஆலந்தூர் நகராட்சியால் அறிவிப்பது யாதெனில்—

1. ஆலந்தூர் நகராட்சி எல்லைக்குள் உள்ள யாதொரு இடத்தையும் நகராட்சி நிர்வாக அலுவலர் அவர்களிடமிருந்து உரிமம் பெறாமல் கீழே குறிக்கப்பட்ட தொழில் அல்லது தொழில்களுக்காக உபயோகப்படுத்தக் கூடாது.

2. ஒரு இடத்தின் சொந்தக்காரரோ அல்லது உபயோகிப்பவரோ எந்த தொழில் நடத்த உத்தேசமோ அதைக் குறித்து ஆண்டு ஆரம்பிப்பதற்கு 30 நாட்களுக்கு குறையாமலும் 90 நாட்களுக்கு மேற்படாமலும் உள்ள கால அளவுக்குள் நிர்வாக அலுவலர் உரிமத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

3. காலம் தவறி வரும் மனுக்களுக்கு ரூபாய் ஒன்று அல்லது அதற்கு குறைந்த தொகைக்கு 25 பைசா வீதம் நியமிக்கப்பட்ட உரிமக் கட்டணத்தின்மேல் அதிகத் தொகை விதித்து வசூலிக்கப்படும்.

4. 255, 258, 262, 269 ஆம் பிரிவுகளில் கொடுக்கப்படும் உரிமங்கள் தொழில் நடத்தும் இடத்திலோ அல்லது வேறு நபரிலோ மாறுதல் செய்ய வேண்டியிருந்தால் வேறு ஒரு உரிமம் வாங்கிக்கொள்ள வேண்டும். இந்த தொழில்கள் மாறுதல் செய்யக் கூடியவையல்ல.

5. 249, 279 ஆம் பிரிவுகளில் கொடுக்கப்படும் உரிமங்கள் ஒரு நபரிலிருந்து மற்றொரு நபருக்கு ரூபாய் பத்து செலுத்துபவரின் பெயரில் மாற்றப்படலாம். ஆனால் மேற்படி பிரிவுகளில் கொடுக்கப்பட்ட உரிமங்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுவதில்லை.

6. எந்த இடத்திலாவது ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலோ அல்லது வேலையோ நடத்துவதானால் மேற்படி தொழில்கள் ஏதாவது ஒன்றுக்கு உண்டான உயர்தர கட்டணம் வசூலிக்கப்படும்.

7. குறிப்பிட்ட நாளில் முடிவடையும் என்று உத்தரவிடப்பட்டாலொழிய 249, 258, 262, 269 ஆம் பிரிவுகளின் கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு அனுமதியும், நிதியாண்டின் முடிவில் அதாவது மார்ச் திங்கள் 31 ஆம் நாளோடு முடிவடையும் சட்டத்தின் மற்றப் பிரிவுகளின்கீழ் தரப்படும் அனுமதிகளின் கால அளவு கட்டணம் அட்டவணையில் சொல்லப்படாமலிருந்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும்.

8. கீழ்க்கண்டவாறு மாறுதல் செய்யப்பட்ட உரிமையானைக் கட்டணங்கள் 1—4—2008-ல் இருந்து மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளின் கீழ்வசூலிக்கப்படும். இந்த அறிவிப்பானது இதற்கு முந்திய இது சம்பந்தமான அறிவிப்புகள் அனைத்தையும் ரத்து செய்கிறது.